OS:269/2019

Date: 23.11.2023

பெயர்  : அசோக்குமார்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை :</u>-** 1 ம் பிரதிவாதி தரப்பில்

நான் டேனிஷ்பேட்டையில் குடியிருக்கிறேன். நான் பொதுபணித்துறையில் வேலை செய்கிறேன். நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்று சொன்னால் நான் இல்லை எனது தாயார் இருக்கிறார். தாவா சொத்து அமைந்துள்ள இடம் எது என்றால் டேனிஸ்பேட்டை கிராமம். தாவா சொத்தின் சர்வே எண், பட்டா எண், செக்குபந்தி தெரியுமா என்றால் சர்வே எண்.387/2A, பட்டா எண் தெரியாது. செக்குபந்தி தெரியும். நான் சொல்லும் சர்வே எண் தவறானது என்றால் சரியல்ல. சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் 46 செண்ட் ஆகும். நான் விஸ்தீரனத்தையும் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு போட்டுள்ளேன் என்றால் தடவழி கேட்டு வழக்கு போட்டுள்ளேன். தடத்தை பொருத்து எந்த சர்வே எண்ணில் செல்கிறது, எவ்வளவு பரப்பளவு செல்கிறது என நான் எனது வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்குரையில் எந்த சர்வே எண்ணில் வண்டி தடம் செல்கிறது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் மற்றும் விஸ்தீரணங்கள் சரியாக வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன்.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/-PW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.